IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.555/2013
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 4.35p.m.

பி.வா.சா.2சாட்சி இந்திராணி க.பெ.வேலுச்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 18.03.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. தாவா வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வழக்கறிஞர் அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நிரூபணவாக்குமூலத்தில் நீதிமன்றத்திற்கு வந்துதான் கையொப்பம் செய்துள்ளேன்.

2. நிரூபணவாக்குமூலத்தை எங்குவைத்து தயார் செய்தார்கள் என்றால் தெரியாது. நிரூபணவாக்குமூலத்தை தட்டச்சு செய்வதற்கு யார் விபரம் கூறினார் என்றால் வழக்கறிஞர்தான் கூறினார். இவ்வழக்கில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் எத்தனை பேர் என்றால் வாதிகள் 2பேர், பிரதிவாதிகள் 2பேர் ஆவார்கள்.

3. பிரதிவாதிகள் யார் என்றால் அழகம்மாள், அழகு ஆகிய 2நபர்கள் ஆவார்கள். மற்ற பிரதிவாதிகளை எனக்கு தெரியாது என்றால் சரிதான். மகாலிங்கம் எனக்கு என்ன உறவுமுறை என்றால் தெரிந்தவர் ஆவார். எத்தனை ஆண்டுகளாக அவரை தெரியும் என்றால் 10 ஆண்டுகள் ஆகும். மகாலிங்கம் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தாரா என்றால்

அழைத்தார். வாதிகளின் தந்தை குருசாமித்தேவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

4. குருசாமித்தேவரின் உடன்பிறந்தவர்கள் 4ஆண்பிள்ளைகள், 1பெண்பிள்ளை என்றால் சரிதான். மேற்படி 4ஆண்பிள்ளைகள் முறையே அழகுமலை, பால்பாண்டி, மகாலிங்கம், வாதிகளின் தந்தை குருசாமி என்றால் சரிதான். மேற்படியாரின் குடும்பச்சொத்துக்களை அவர்கள் பாகம் செய்து கொண்டார்களா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. அவர்களின் குடும்பச் சொத்துக்களில் எந்தெந்த சர்வே எண்ணில் யார்யாருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கில் கட்டுப்பட்ட சொத்து தொடர்பாக ஒருபத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் இந்திராணி என்று நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

6. அழகம்மாளின் கணவர் பெயர் அழகுமலை என்றால் சரிதான். அவரின் மகள் பெயர் வள்ளி ஆகும். மேற்படி வள்ளிக்கு பி.வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கும் காலத்தில் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி வள்ளி சிறுகுழந்தையாக இருக்கும்போது அழகம்மாள் தனது மகள் வள்ளியை அழைத்துக்கொண்டு கணவரை பிரிந்து அரசபட்டி கிராமத்தில் குடியேறிவிட்டார் என்றால் சரிதான்.

7. கைக்குழந்தையுடன் சென்ற அழகம்மாள் இரண்டாவதாக அரசபட்டியைச் சேர்ந்த பாண்டி என்பவரை திருமணம் செய்து கொண்டார்

என்றால் சரிதான். மேற்படி பாண்டிக்கும், அழகம்மாளுக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் 4குழந்தைகள் ஆகும். பி.வா.சா.ஆ.1ல் கண்ட சொத்து அழகம்மாளுக்கு அவரது கணவர் அழகுமலை கொடுத்ததாக கூறித்தான் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8. அழகம்மாள் கைக்குழந்தையுடன் கூடக்கோவில் கிராமத்தை விட்டு அரசபட்டி கிராமத்திற்கு சென்ற பிறகு சுமார் 25 ஆண்டுகளுக்கு பின்புதான் பி.வா.சா.ஆ.1 கிரையபத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். கணவரை விட்டு பிரிந்து சென்ற அழகம்மாள் அரசபட்டியில்தான் வசித்து வந்தாரே தவிர கூடக்கோவில் கிராமத்திற்கு வரவில்லை என்றால் சரிதான்.

9. மேற்படி 25 ஆண்டுக்காலத்தில் அழகுமலைதான் மேற்படி சொத்துக்களை தன்கைவசம் வைத்து அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். அழகம்மாள் கணவரை பிரிந்து சென்றதால் அழகுமலைக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அழகம்மாளுக்கு பாத்தியம் இல்லை என்றும், அந்த சொத்தை அழகம்மாள் கிரையம் செய்வதற்கு உரிமை இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

10. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்வதற்கு நான் ஏற்கனவே பத்திர அலுவலகத்தில் அன்றைய தேதியில் வேறொரு எங்களுடை குடும்பச்சொத்தை பதிவு செய்வதற்கு வந்திருந்த சூழ்நிலையில் மகாலிங்கம் கேட்டுக்கொண்டதன் பேரில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்வதற்கு யார் விபரம் கூறியது, அந்த ஆவணம் எங்கு வைத்து தயார்செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

11.பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எத்தனை இலக்கச் சொத்துக்களுக்கு பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணம் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கில் யார்யார் என்னென்ன பரிகாரங்கள் கேட்டுள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மகாலிங்கம் அழைத்ததன்பேரில் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் வாதிகளின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:5.00p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.18 18:22:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.